புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | மார்ச் 15, 2018 | புரட்சி 17 | முழக்கம் 09 | விலை: ரூ.3.00

# ஜாதி மறுப்பு திருமணங்களுடன் திருப்பூரில் கழகத்தின் மகளிர் நாள் எழுச்சி மாநாடு

திராவிடர் விடுதலைக் கழகம் திருப்பூர் மாவட்டத்தின் சார்பில் மகளிர் நாள் மாவட்ட மாநாட்டு பேரணி 12.03.2018 திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் அருகில் இருந்து துவங்கியது. பேரணிக்கு முன்பாக புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு ஜாதி ஒழிப்பு முழக்கங்களுடன் மாலை அணிவித்தனர். பேரணியை கழகத் தலைவர் கொளத்தூர் மணி கொடி அசைத்து துவங்கி வைத்தார். பேரணிக்கு கழகத் தோழர் சுசீலா தலைமை தாங்கினார்.




பேரணி முன் வரிசையில் பறை முழக்கமும், கழக மகளிரின் நடனத்துடன் சென்றது. குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என வரிசையில் சுயமரியாதை இயக்கப்பெண்கள், சமூக செயற்பாட்டாளர்கள், போராளிகளின் படங்களை தாங்கிப் பிடித்தபடி கொள்கை முழக்கங்களுடன் எழுச்சியுடன் அணி வகுத்தனர். சாலையின் இருபுறமும் மக்கள் பேரணியை பார்வையிட்டனர்.

திருப்பூர் ரயில் நிலையம் அருகில் உள்ள பெரியார் சிலையை பேரணி அடைந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி பெரியார் சிலை, அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார். அப்போது அங்கு பெருந்திரளாய் கூடியிருந்த கழகத் தோழர்கள் கொள்கை முழக்க மிட்டார்கள்.அதனைத் தொடர்ந்து நடந்த பேரணி மாநாடு நடைபெற்ற இராயபுரம் பகுதியை வந்தடைந்தது.

மாலை 6 மணியளவில் மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின. மாநாட்டிற்கு பார்வதி தலைமை யேற்றார். சரண்யா வரவேற்புரையாற்றினார்.

முதல் நிகழ்வாக பெரியார் பிஞ்சுகள் யாழினி, யாழிசை, அமுதினி ஆகியோரும் மாணவர் கழகத்தின் வினோதினி, வைத்தீஸ்வரி, சுதா, மணிமொழி, கனல்மதி ஆகியோரும் பெரியாரிய, பெண்ணுரிமை இயக்கப் பாடல் களைப் பாடினார்கள்.

தொடர்ந்து கோவை நிமிர்வு கலையகத்தின் அதிரும் பறையிசை துவங்கியது.பறை இசையின் தொன்மை, புகழ் ஆகியவற்றின் விளங்கங்களுடன் அதன் தேவையையும் நடனத்துடன்கூடிய விளக்கமாக நிகழ்த்தியது பொது மக்களின் கரவொலியுடன் பேராதரவை பெற்றது.

மாணவர் கழகத்தின் காருண்யா, மகளிர் தினம் குறித்த அறிமுக உரை நிகழ்த்தினார். அடுத்து பகுத்தறிவு வழக்காடு மன்றம் நடைபெற்றது.

வழக்காடு மன்ற நடுவர் : மேட்டூர் அனிதா; பகுத்தறிவு வழக்கறிஞராக : சென்னை இரண்யா; டவாலியாக கனல் மதி, வழக்கு தொடுப்பவராக அறிவுமதி குற்றவாளிகள் : மதத்தலைவராக கொளத்தூர் சுதா; குடும்பத் தலைவராக கோபி மணி மொழி; ஊடகப் பெரு முதலாளியாக பல்லடம் தேன் மொழி; கலாச்சாரக் காவலராக கோவை வைத்தீஸ்வரி; பன்னாட்டு நிறுவன அதிபராக திருப்பூர் சங்கீதா ஆகியோர் விசாரிக்கப்பட்டனர்.

மாலை நிகழ்விற்கு தலைமையேற்ற பார்வதி, பெரியாரியல் தன் வாழ்வில் கொடுத்த தன்னம்பிக்கையையும், துணிச்சலையும் எடுத்துரைத்தார்.

பசு.கவுதமன் நூல் வெளியீட்டு நிகழ்ச்சி மாநாட்டில் நடைபெற்றது.இரண்டு ஜாதி மறுப்புத் திருமணங்களும் மாநாட்டில் சிறப்பு நிகழ்வாக நடந்தது.

கருத்துரை வழங்கிய சென்னை ராஜி, குடும்பம், கற்பு, தாய்மை ஆகியவை பெண்களை எப்படி அடிமைப்படுத்துகின்றன என்பதை எளிமையாக பெரியாரிய கோணத்தில் இயல்பாக கூறினார். அடுத்துப் பேசிய சிவகாமி மாநாட்டிற்கான திட்ட மிடல், வீதி வசூல், மாநாட்டு பணிகளில் கழக மகளிரின் ஈடுபாடு, பங்களிப்பு ஆகியவற்றை விவரித்தார்.

சிறப்புரையாற்றிய பேராசிரியர் சுந்தரவள்ளி, பூணூல் அறுத்த தோழர்களுக்கு வாழ்த்துக் களும், மதவாதிகளுக்கு எச்சரிக்கையும் என அதிரடியாய் பேச்சைத் தொடங்கி விரிவாக பெரியாரியலையும், பெண்கடவுள்களுக்கும் பாலின பாகுபாடு உண்டென்பதையும், ஆண்டாள் பிரச்சனையில் தமிழகத்தின் எதிர்வினை போதாது என்பதையும் பதிவு செய்தார்.

நிறைவுரையாற்றிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 1930களிலேயே பெரியாரின் பெண் விடுதலைக் கருத்துக்களை சுட்டிக் காட்டிப் பேசினார். தனித்து வாழும் பெண்களின் சமூக ஏற்பு, உரிமைகள் குறித்து பேசிய தலைவர், மாநாட்டை ஏற்பாடு செய்த மகளிருக்கு பாராட்டுக்களை தெரிவித்தார்.

இறுதியாக வசந்தி நன்றியுரையாற்றினார். தோழர்களுக்கு நினைவுப் பரிசுகளாக பெரியாரிய புத்தகங்கள், பசு.கவுதமன் எழுதிய நூல், பெண் ஏன் அடிமையானாள் ஆகியவை வழங்கப்பட்டன. மாநாட்டில் துண்டேந்தி வசூல் செய்ததில் பொதுமக்கள் அளித்த தொகை 3550. (ரூபாய் மூவாயிரத்து ஐநூற்றி அய்ம்பது).

மாநாட்டுப் பணிகளை திருப்பூர் மாவட்டத் தோழர்கள் சிறப்பாக செய்திருந்தனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பித்தனர்.

மாநாட்டில் பசு கவுதமன் எழுதிய "பெரியாரிய பெண்ணிய சிந்தனைகள்" எனும் நூலை சிவகுரு (பாரதி புத்தகாலயம்) வெளியிட, ஈரோடு பிரேமா பெற்றுக் கொண்டார்.

பெரியாரின் "பெண் ஏன் அடிமையானாள்" நூலை கழகத் தலைவர் வெளியிட காருண்யா பெற்றுக் கொண்டார். சிவகுரு நூல்கள் குறித்து அறிமுகம் செய்து உரையாற்றினார்.

### மேடையில் ஜாதி மறுப்புத் திருமணங்கள்

மாநாட்டில் சிறப்பு நிகழ்வாக இரண்டு ஜாதிமறுப்புத் திருமணங்கள் நடைபெற்றன. வாழ்க்கை இணையேற்பு ஒப்பந்தத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவேற்றி வைத்தார்.

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், ஆவணியூர், வி.என்.பாளையம் தங்கம்மாள்-அண்ணாமலை ஆகியோரின் மகன் செல்வ குமார் எடப்பாடி வட்டம், ஜலகண்டபுரம் சாலை காவலர் குடியிருப்பில் வசிக்கும் சின்னராசு-மயில் ஆகியோரின் மகள் ஸ்வாதிப்பிரியா ஆகியோருக்கும்,

சேலம், உடையாப்பட்டி, சாந்தி-கிருஷ்ணன் ஆகியோரின் மகன் பிரபு பழனியில் வசிக்கும் செல்வி-வடிவேல் ஆகியோரின் மகள் பிரியதர்ஷினி ஆகியோருக்கும் மாநாட்டு மேடையில் வாழ்க்கை இணையேற்பு நிகழ்ந்தது.

இரண்டு இணையேற்பும் பிற்படுத்தப்பட் டோர் தாழ்த்தப்பட்டோர் ஆகியோர் இடையே நிகழ்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



மணமக்களுடன் கழகக் குடும்பத்தினர்

தலையங்கம்

## சிலிர்த்தெழுந்தது தமிழினம்!

திரிபுராவில் லெனின் சிலை உடைப்பை நியாயப்படுத்தியும், அடுத்து தமிழ்நாட்டில் ஜாதி வெறியர் ஈ.வெ.ரா. சிலை உடைக்கப்படும் என்றும், பா.ஜ.க.வின் தேசியச் செயலாளராக உள்ள எச். ராஜாவின் முகநூல் பதிவு தமிழகத்தையே பெரியாருக்கு ஆதரவாக சிலிர்த்தெழச் செய்துவிட்டது. ‘அப்படி ஒரு பதிவை நான் போடவில்லை; என்னுடைய வலைதளப் பொறுப்பை ஏற்றுள்ள ஊழியர் (அட்மின்) தவறாகப் பதிவேற்றி விட்டார்.’ என்று பதுங்கினார் எச். ராஜா. அவர் கக்கிய நஞ்சை அவரையே திரும்ப விழுங்க வைத்தது இந்த எழுச்சி. பிரதமர் மோடியும் பா.ஜ.க. தலைவர் அமீத்ஷாவும் மத்திய அமைச்சர் பொன் இராதா கிருஷ்ணனும், தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசையும் எச்.ராஜாவின் கருத்தை ஏற்க முடியாது என்று அறிவிக்கும் நிலையை உருவாக்கியது – தமிழ்நாட்டின் சிலிர்ப்பு.

பெரியாரை அவ்வப்போது விமர்சனத்துக்குள்ளாக்கி வந்த சில தமிழ்த் தேசிய அமைப்புகளும் கலைத் துறையினரும் தங்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்து நின்ற ‘பெரியார்’ மீதான உணர்வுகளை வெளிப்படுத்தினர். கேரள முதல்வர் பினராயி விஜயனும், கருநாடக முதல்வர் சித்தராமையாவும் எழுச்சியில் தங்களை இணைத்துக் கொண்டு கண்டனங்களை வெளியிட்டனர்.

1973ஆம் ஆண்டு அதாவது 45 ஆண்டுகளுக்குமுன் தனது ‘சுற்றுப் பயணத்தை’ முடித்துக் கொண்டு தமிழர்களிடமிருந்து விடைபெற்றார் பெரியார். ஆனால் தமிழர்களின் இதயங்களில் அவர் பயணித்துக் கொண்டே இருப்பதையும், குறிப்பாக பெரியாரையே பார்த்திடாத இளைய தலைமுறை பெரியார் சிந்தனைகளை அறிந்தும் படித்தும் அந்த உணர்வில் ஊன்றி நிற்பதையும் சமூக வலைதளங்கள் வழியாக பார்த்தபோது மெய்சிலிர்த்துப் போனது.

சமூகத்தின் விடுதலைக்கும் உரிமைக்குமான கொள்கைகளும் கோட்பாடுகளும் நேர்மையான ஒரு தலைவரால் விதைக்கப்படும்போது அதன் சமூகத் தாக்கம் தலைமுறைகளைக் கடந்தும் உயிர்த் துடிப்போடு இயங்கிக் கொண்டேயிருக்கும் என்பதை தமிழ்மண் நிரூபித்துக் காட்டியது.

**“சுயமரியாதை இயக்கமானது பரந்த கொள்கைகளை உடையது. அது ஒருவரால் உண்டாக்கப் பட்டாலும் பரந்த மக்களிடையே பரவி விட்டபடியினால், அசைக்க முடியாத நிலைமைக்கு வந்துவிட்டது. மக்களே அதைக் கவனித்துக் கொள்வார்கள்” என்று 1930ஆம் ஆண்டிலேயே பெரியார் எழுதியது – கல்வெட்டு சாசனமாகவே பதிந்து நிற்கிறது.**

பெரியார் ஊட்டிய கொள்கை உணர்வையும் உணர்ச்சியையும் எந்த அளவில் தமிழர்கள் பதிய வைத்திருக்கிறார்கள் என்பதை சோதித்துப் பார்க்க, எச்.ராஜாக்களின் ‘வசை’கள் பயன்பட்டு வருகின்றன என்ற நோக்கில் எச்.ராஜாக்களை நாம் பாராட்டலாம். பார்ப்பன இறுமாப்பு வெளிச்சத்துக்கு வரும்போது பெரியாரின் கைத்தடியை தமிழர்கள் தங்கள் கரங்களில் ஏந்திக் கொண்டு களம் காண வருவார்கள் என்பதை பார்ப்பனியம் இனிமேலாவது உணர வேண்டும்!

# சி.பி.எஸ்.இ. வினாத்தாளில் ‘வர்ணாஸ்ரம’ பெருமை

நடுவண் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இடைநிலைக் கல்வி வாரியமான சி.பி.எஸ்.இ., பாடத் திட்டத்தில் இயங்கும் அனைத்துப் பள்ளிகளிலும் தேர்வுகள் தொடங்கியுள்ளன.

அதில் 6ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடப் பிரிவுக்கான வினாத்தாளில், பிஞ்சு உள்ளங்களில் ‘வர்ணாஸ்ரமத்தை’த் திணிக்கும் வினா ஒன்று கேட்கப்பட்டுள்ளது.

“இந்து மத வர்ணாஸ்ரமத்தின்படி மிகக் கீழான ஜாதி எது? 1. பிராமணன், 2. சூத்திரர்கள், 3. சத்திரியர்கள், 4. வனப்பிரஸ்தர்கள் என 4 வாய்ப்புகள் தரப்பட்டுள்ளது. இதில் எது சரி என்பதை 6ஆம் வகுப்பு மாணவன் கண்டுபிடித்து ‘டிக்’ செய்ய வேண்டும். ‘சூத்திரன்’ தான் கீழான ஜாதி என்று கூறினால்தான் மதிப்பெண்.

வரலாற்று புத்தகத்தில் வர்ணாஸ்ரம ஜாதி அமைப்புப் பற்றி விரிவாக விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றைப் பின் பற்றக்கூடாது என்று கடைசியில் ஒரு வரியை மட்டும் பாதுகாப்பாக சேர்த்துள்ளனர்.

இளம் மாணவர்கள் பின்பற்றவே கூடாத ஒரு கருத்தை ஏன் பாடத் திட்டத்தில் சேர்த்து ‘சூத்திரன்’ தான் இழிவான ஜாதி என்று அவர்களின் மண்டையில் ஏற்ற வேண்டும்? கீழ்க்கண்ட கேள்வியை வினாத்தாளில் கேட்பார்களா?

‘வர்ணாஸ்ரம தர்மம்’ எனும் ஏற்றத் தாழ்வுகளை சமூகத்தில் திணித்தது யார்? (1) பிராமணர், (2) சூத்திரர், (3) வைசியர், (4) வனப் பிரஸ்தர்கள்.

- நிச்சயம் கேட்க மாட்டார்கள். ‘பிராமணர்’கள் முகத்திரை கிழிந்துவிடும். ஆனால் இழிவான ஜாதி எது என்று மட்டும் கேள்வி கேட்பார்களாம்?

‘இந்துத்துவம்’, ‘இராமராஜ்யம்’ என்ற பெயரில் இவர்கள் கூறுவது எல்லாமே பார்ப்பனியத்தை உயர்த்திப் பிடிப்பதுதான் என்பதற்கு இதுவும் ஒரு சான்று!

## 123 நாடுகளில் பெரியார் சிலை குறித்து தேடல்கள்

உலக அளவில் சிலை என்று தேடினால், இணையத் தேடலில் இடம்பெறும் முதன்மை வார்த்தையாகப் ‘பெரியார் சிலை’ உள்ளது. 6 கண்டங்கள், 123 நாடுகளில் சிலை குறித்த தேடல் கடந்த 4 நாள்களில் அதிகம் இடம் பிடித்துள்ளது. தேடல் அதிகம் உள்ள இடங்கள் அனைத்துமே தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது. உலக அளவில் சிலை குறித்து அதிகம் தேடிய நாடுகளாகச் சீனா, நேபாளம், இரான் ஆகிய நாடுகள் உள்ளன.

சிலை குறித்த தேடலில், திரிபுரா லெனின் சிலை, பெரியார் சிலை, யார் லெனின் போன்றவை உலக அளவில் தேடப்பட்டுள்ளன. இந்திய அளவிலான தேடலிலும் இதே முடிவுகள்தான் பிரதிபலித்தன. இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் பெரியார் குறித்துத் தேடியுள்ளன.

# தூத்துக்குடியில் பெரியாரியல் பயிலரங்கம்



தூத்துக்குடி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக 11-03-2018 அன்று தூத்துக்குடி முத்து மஹாலில் ஒரு நாள் "பெரியாரியல் பயிலரங்கம்" நடைபெற்றது.

இதில் திராவிடர் இயக்க வரலாறு பற்றியும், வகுப்புரிமை வரலாறு பற்றியும், தந்தை பெரியாரின் போராட்ட வரலாறு பற்றியும், தமிழர்- திராவிடர் பற்றிய விளக்கங்களையும், திராவிடர் இயக்கத்தின் மீதான அவதூறுகளுக்கு விளக்கங்களையும், திராவிடர் விடுதலைக் கழகத்தின் போராட்ட வரலாறு பற்றியும் மாநில பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் விரிவாக பயிற்சியளித்தார். பயிற்சி வகுப்புக்கு பின்னர் கலந்து கொண்ட பயிற்சியாளர்கள் தங்களுக்கு தோன்றிய சந்தேகங்களை கேள்விகளாக கேட்டு விளக்கம் பெற்றனர்.

இப்பயிற்சி வகுப்பில் 25க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். காலை மாலை தேநீருடன் மதிய உணவாக பிரியாணி வழங்கப் பட்டது. இப்பயிற்ச்சி வகுப்புக்கான ஏற்பாட்டை தூத்துக்குடி திவிக மாவட்டச் செயலாளர் இரவி சங்கர் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.


## ‘நிமிர்வோம்’ – பிப்ரவரி 2018 இதழ்




- ‘ஆண்டாள்’, ‘தேவதாசி மரபு’ குறித்து ஆய்வுக் கட்டுரைகள்
- நேர்மையின் சிகரம் ஓமந்தூரார்.
- தமிழ் நாட்டைப் புறக்கணிக்கும் நடுவண் ஆட்சி
- டார்வின் கோட்பாடு; மத்திய அமைச்சருக்கு அறிவியல் மறுப்பு.
- திருமூலரை எதிர்க்காத பார்ப்பனர்கள் வள்ளலாரை எதிர்ப்பது ஏன்?
- சிறுபான்மை ஜாதிகளை விலக்கி வைக்கும் ‘ஜனநாயகம்’.
- சுயமரியாதைத் திருமணம் பற்றி அண்ணா.
- புரட்சிக் கவிஞர் நாடகம் குறித்து பெரியார்.

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...
தனி இதழ் விலை : ரூ.20
தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி எண்: 044 24980745/7299230363
www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com


## ‘ஜென்னி–மார்க்ஸ்’ பிறப்பு மகிழ்வாக கழக ஏட்டுக்கு நன்கொடை

கழகத் தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் அவர்களின் மகன் வீரமணி-மேரி இணையருக்கு பிப்ரவரி 18ஆம் தேதி பிறந்த பெண் குழந்தைக்கு ஜென்னி மார்க்ஸ் என்று பெயரிடப் பட்டுள்ளது. ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட இந்த இணையர், குழந்தைப் பிறப்பு மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.2000 நன்கொடை வழங்கினர். (நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்-ஆர்)


“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 9841489896
newsdvk@gmail.com

# உள் துறை ஆதரவுடன் உலா வரும் 'இராமராஜ்ய யாத்திரை'

*மீண்டும் இராம ராஜ்ய யாத்திரையை பா.ஜ.க. பின்னால் இருந்து கொண்டு பரிவாரங்களை முன்னிறுத்தித் தொடங்கியிருப்பதன் பின்னணியை அலசுகிறது, கட்டுரை.*

2014 ஆம் ஆண்டில், "ஊழல்" காங்கிரஸ் கட்சிக்கு எதிரான கடுமையான பிரச்சாரத்தின் மூலம்தான் ஆட்சி அமைத்தார் பிரதமர் நரேந்திர மோடி. பொருளாதார உதவி செய்யக் கூடிய உலகளாவிய ஆதரவாளர்களின் உதவியோடு, "அச்சே தின் (Acche din)", "தூய்மை இந்தியா" போன்ற அலங்காரச் சொற்களால் மக்களைக் கவர்ந்தார் மோடி. கடந்த 3 ஆண்டுகளில், பொது வாழ்க்கை சீரழிந்துவிட்டது. அதன் விளைவுகளிலிருந்து மீள்வது மிகக் கடினம்!

ஃபாசிசக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி காவிக் கும்பலை ஊக்குவிப்பதும், சிறுபான்மையினர் மீது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து மதவாத நஞ்சைப் பரப்புவதும், ஜனநாயகத்தைத் திட்டமிட்டு சீரழிப்பதும், பாராளுமன்ற நல்லொழுக்கத்திற்குக் கேடு விளைவிப்பதும், நிறுவனங்களைக் காவி மயமாக்குவதும், பண மதிப்பிழப்பு (Demonitisation) போன்ற பகுத்தறிவற்ற முடிவுகளை எடுப்பதும், ஜி.எஸ்.டி.யை அவசரமாக செயல்படுத்தியதும், இந்திய பொருளாதார வளர்ச்சி விகிதத்தைத் தலை கீழாக மாற்றியதுமே இந்த ஆட்சியின் அடையாளங்களாகும். மக்கள் விழிக்கத் தொடங்கியுள்ளனர். அதன் விளைவாகத் தான், சமீபத்திய தேர்தல்களில் பா.ஜ.க. சரிவைச் சந்தித்து வருகிறது. எனவே, பா.ஜ.க-வின் மதவாத யுக்தி "ராமர் கோவில்" என்ற பெயரில் மீண்டும் உயிர் பெற்றுள்ளது.

**மதவாதம்:-** ராமர் கோயில் கட்டுதல் காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் எதிர்ப்பு உள்ள சட்டப்பிரிவு 370-ஐ நீக்குதல் ஆகியவைதான் பா.ஜ.க-வை பயங்கரவாதக் கட்சி என்ற பெயரிலிருந்து ஓர் அரசியல் சக்தியாக முன் நகர்த்தியது. அதில் குறிப்பிடத்தக்கது ராமர் கோயில் பிரச்சனை. 1 பிப்ரவரி 1986 அன்று, ஃபைசாபாத் நீதிபதியின் தீர்ப்பு வெளியாகிய ஒரு மணி நேரத்திற்குள், ராஜீவ் காந்தி அரசு பாபர் மசூதியின் பூட்டுகளைத் திறக்க உத்தர விட்டது. பா.ஜ.க.-வின் ராமர் கோயில் பிரச்சாரத்தை வலுவிழக்கச் செய்ய வேண்டும் என்பதே ராஜீவின் திட்டம். ஆனால் அதற்கு மாறாக சங் பரிவார் தன்னை வளர்த்துக் கொள்ள அதனை பயன்படுத்திக் கொண்டது. அம்முயற்சி பா.ஜ.க.விற்குப் (அன்றைய ஜனசங்கம்) பெரிதும் உதவியது. 1984-இல் இரண்டு இடங்களைக் கைப்பற்றிய பா.ஜ.க. 1989-இல் 86 இடங்களைக் கைப்பற்றியது. இந்த வெற்றி கொடுத்த உத்வேகத்தில், 25 செப்டம்பர் 1990 அன்று, அன்றைய பா.ஜ.க. தலைவரான லால் கிருஷ்ண அத்வானி குஜராத்திலுள்ள சோம்நாத்தில் இருந்து உத்தர பிரதேசத்தில் உள்ள அயோத்தி வரை ஒரு ரத யாத்திரையை மேற்கொண்டார். உள்துறை அமைச்சர் பிரதிப்சின் ஜடேஜாவின் கூற்றுப்படி, அந்த யாத்திரையைக் கட்டமைத்தவர் மோடி தான். 1990 ஆம் ஆண்டு அக்டோபர் 23 அன்று பீகாரிலிள்ள சமஸ்திபூரில், லாலு பிரசாத் யாதவின் அரசால், அத்வானி கைது செய்யப்பட்டார். இதன் விளைவாக கர சேவகர்கள் வெறித்தனமாக அயோத்தியில் ஒன்று கூடினர். உத்தரப்பிரதேசத்தில், அக்டோபர் 30 மற்றும் நவம்பர் 2 ஆகிய தேதிகளில் முலாயம் சிங் அரசு அவர்கள் மேல் துப்பாக்கி சூடு நடத்தியது. முடிவாக, டிசம்பர் 6 1992 அன்று பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அது நாடு முழுவதும் மதக் கலவரங்களைத் தூண்டியது. குறிப்பாக, மும்பை, சூரத், அகமதாபாத், கான்பூர், தில்லி மற்றும் போபால் ஆகிய நகரங்களில் அக்கலவரத்தின் விளைவாக 2,000 பேர் (பெரும்பாலும் இஸ்லாமியர்கள்) கொல்லப்பட்டனர். பல கோடி மதிப்பிலான சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன. பா.ஜ.க-வின் இத்தகைய மதவாதக் கட்டமைப்பிற்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் கொடுத்தார் மோடி. ராமர் கோயில் பிரச்சினையின் தொடர்ச்சியாக நடந்த 2002 குஜராத் படுகொலைகளில் மேலும் 2000 இஸ்லாமியர்களைக் கொன்றது, மதவெறி.

இந்த மதவாதப் படுகொலைகள் மூலம் பா.ஜ.க. பயனடைந்தது. மக்களிடையே மதவாத வெறித்தனத்தைக் கிளறிவிட யாத்திரைகள் பயன்பட்டன. பா.ஜ.க.வின் இரண்டாவது ரத யாத்திரையான "ஏக்தா யாத்திரை" கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை கட்சித் தலைவர் முரளி மனோகர் ஜோஷி தலைமையில் நடந்தது. 1992 இல் குடியரசு தினத்தன்று, ஸ்ரீநகரில் உள்ள லால் சவுக் என்ற இடத்தில் பலத்த பாதுகாப்புடன் மூவண்ணக் கொடியை ஏற்றி, மோடி உட்பட சில பா.ஜ.க. தலைவர்களோடு அந்த யாத்திரை முடிவடைந்தது. 2011 ஆம் ஆண்டு கொல்கத்தாவிலிருந்து காஷ்மீர் வரை "ராஷ்டிரிய ஏக்தா யாத்திரை" திட்டமிடப்பட்டது. இருப்பினும், ஸ்ரீநகரில் கொடி ஏற்ற பா.ஜ.க.வின் யுவ மோர்ச்சா மேற்கொண்ட முயற்சி அமைதியைக் குலைத்துவிடும் என்பதால், அன்றைய உமர் அப்துல்லா தலைமையிலான ஜம்மு காஷ்மீர் அரசு அதனைத் தடுத்துவிட்டது.

மேற்கண்ட பிரச்சினைகளில் மவுனம் சாதித்து வந்த பா.ஜ.க. தேர்தல் பிரச்சாரத்தில் மட்டும் "வளர்ச்சி" என்ற கருத்தாக்கத்தை முன்னிறுத்தியது. இப்போது, மீண்டும் வாக்காளர்களிடையே அதிருப்தி நிலவுவதால், பழைய யுக்தியான மதவாதத்தில் ஈடுபடுகின்றனர்.

**மீண்டும் ராமர் கோயில்:-** பா.ஜ.க.வின் உலகளாவிய ஆதரவாளர்களுக்கு இதில் உடன்பாடு இல்லாததால், அயோத்தியிலிருந்து இராமேசுவரம் வரை 41 நாட்கள் நடக்கும் "ராம ராஜ்ய ரத யாத்திரை"யிலிருந்து (2018) விலகி நிற்கின்றனர். முன்னதாக உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் அவர்களால் தொடங்கி வைக்கப்பட இருந்த இந்த யாத்திரை, கட்சியின் வேறொரு பாராளுமன்ற உறுப்பினரால் அயோத்தியில் 13 பிப்ரவரி 2018 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் துணை அமைப்புகளான "விஷ்வ இந்து பரிஷத்" மற்றும் "முஸ்லிம் ராஷ்ட்ரிய மன்ச்" என்ற அமைப்புகளின் ஆதரவோடு "ஸ்ரீராம தாசா மிஷன் யுனிவர்சல் சொசைட்டி" என்ற மராட்டிய அமைப்பால் இந்த யாத்திரை நடத்தப்படுகிறது. ராம ராஜ்ஜியம் மற்றும் ராமர் கோயிலைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இது நடத்தப் படுகிறது.

பா.ஜ.க. இந்த யாத்திரையிலிருந்து விலகி நிற்கிறது. ஆனால், ஆறு மாநிலங்களின் தலைமைக் காவல்துறை இயக்குநர்களுக்கும் யாத்திரை செல்வதற்கு உதவுமாறு மத்திய உள்துறை அமைச்சகம் கடிதம் எழுதியுள்ளது. சமூக ஆர்வலர்களால் நடத்தப்படும் சிறிய பொது கூட்டங்களுக்குக் கூட அனுமதி வழங்க மறுத்து வரும் அரசாங்கம், சட்ட ஒழுங்கிற்குப் பேரபாயம் விளைவிக்கக் கூடிய இந்த யாத்திரைக்கு அனுமதி அளித்திருப்பது வியப்பாக உள்ளது.

> **கடந்த கால**
> **கலவர யாத்திரைகளை**
> **கட்டமைத்தவர்**
> **இன்றைய பிரதமர் மோடி**

ராம ராஜ்ஜியத்தை மீண்டும் கொண்டு வருவது, பள்ளி மற்றும் கல்லூரிப் பாடத்திட்டங்களில் இராமாயணத்தை இணைப்பது, வாராந்திர விடுமுறையை ஞாயிற்றுக் கிழமையிலிருந்து வியாழக் கிழமைக்கு மாற்றுவது, உலக இந்து தினத்தைப் பிரகடனம் செய்வது போன்றவையே இந்த யாத்திரையின் கோரிக்கைகளாகும். 14 மார்ச் 2018 அன்று உச்ச நீதி மன்றத்தின் இறுதிக் கட்ட விசாரணைக்கு வரவிருக்கும் பாபர் மசூதி பிரச்சனைக்கு இந்துத்துவா சக்திகள் நீதிமன்றத் தலையீடில்லாமல் தீர்வு தேடிக் கொள்வதற்காக இந்த யாத்திரை நடத்தப்படுகிறது என்ற கோணத்திலும் இதைப் பார்க்கலாம்! இதே அழுத்தத்தை இஸ்லாமிய அமைப்புகள் மீதும் இந்த யாத்திரை உருவாக்கலாம். பொது மக்களைத் தன் சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுக்க வைக்க, "ராம ராஜ்ஜியம்" என்ற தத்துவம், காந்தி அவர்களால் முதன்முதலில் பயன்படுத்தப் பட்டது. சுதந்திரம் அடைந்தவுடன் ராம ராஜ்ஜியத்தை அமைப்பேன் என்ற சத்தியத்துடன் அதைப் பயன்படுத்தினார் காந்தி. காந்தி, அவரது வழக்கமான பாணியில், அதன் விளக்கத்தையும் இந்து மதத்திற்குச் சம்மந்தமே இல்லாதது போல் மாற்றினார். 26 பிப்ரவரி 1947 அன்று, காந்தி ஓர் கேள்விக்கு பதிலளித்த போது,

"ராம ராஜ்ஜியம் என்பது 'இந்துக்களின் ஆட்சி' என்று யாரும் தவறாக நினைக்க வேண்டாம். என்னுடைய ராம் என்பது கடவுளின் இன்னொரு பெயர். நான் விரும்புவது, பூமியில் கடவுளின் ஆட்சியை நிறுவும் "குட ராஜ்" (Khuda Raj) தான்." என்று கூறியிருக்கிறார். (Khuda என்பது இஸ்லாத்தில் கடவுளைக் குறிக்கும்)

(இராம ராஜ்யம் குறித்து காந்தியார் பேசி வந்தபோது இராமராஜ்யம் என்பது பார்ப்பன மேலாண்மை நிறுவும் ராஜ்யம் என்பதை விளக்கி பெரியார் நடத்திய ஆங்கில இதழான 'ரிவோல்ட்' தொடர் கட்டுரை எழுதி அதை காந்தியார் பார்வைக்கு அனுப்பியது. அதற்குப் பிறகு காந்தி, தான் பேசும் 'இராமராஜ்யம்' வேறு என்ற விளக்கத்தை முன் வைக்கத் தொடங்கினார். - ஆர்)

மோடி, குஜராத் முதலமைச்சராக இருந்த போது, ராம ராஜ்ஜியம் என்றால் நல்லாட்சி என்று பொருள் என்றார். ஆனால், பெருமுதலாளிகள் மற்றும் அவர்களது நிறுவனங்களின் பேராசையை நிறைவேற்றுவதற்காக, பொதுமக்கள் நலத்திற்குக் கேடு விளைவித்து வந்தார். ராம ராஜ்ஜியம் என்ற சொல்லை இந்துக்களை ஈர்ப்பதற்காகவே பயன்படுத்துகின்றனர். காங்கிரசு கட்சியின் 1989 தேர்தல் பிரச்சாரத்தை அயோத்தியிலிருந்து ராஜீவ் காந்தி தொடங்கிய போது, ராம ராஜ்ஜியத்தை ஆதரித்துப் பேசினார். இன்று ராகுலும் அதையே பின்பற்றுகிறார். ராமாயணத்தில் உள்ளது போல் ராம ராஜ்ஜியம் என்றால் நல்லாட்சி என்று மக்களை நினைக்க வைக்கிறார்கள். வால்மிகி ராமாயணத்தின் ஆறாம் தொகுதியான லங்ககந்தாவில்,

"அனைவரும் (பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள்) பேராசையின்றி அவரவர்களுக்கு தர்மப்படி விதிக்கப்பட்ட கடமைகளையும் வேலைகளையும் திருப்தியோடு செய்கின்றனர். காண்டம்:116 வசனம்:89" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

காந்தி நம்பிய, நமது ஆட்சியாளர்கள் கொண்டு வரத் துடிக்கும் வர்ணாசிரம முறை இது தான். இப்படிப்பட்ட ராம ராஜ்ஜியத்தைக் கண்டிப்பாக மறுக்கப் போகும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், சூத்திரகள் மற்றும் இந்து அல்லாத பிற மதத்தைச் சேர்ந்தவர்களின் நிலை என்ன?

**எதிர்வினை இல்லாதது ஏன்? :** பா.ஜ.க.வின் இந்துத்துவாவிற்கு எதிர்வினை ஆற்ற உண்மையில் எந்தவித அரசியல் எதிரிகளும் இல்லை. அனைத்து கட்சிகளும் ஒற்றுமையாக மக்கள் விரோதக் கூட்டணியாக இயங்குகின்றன. தற்போதைய சூழலில், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளைத் தவிர, வேறெந்த கட்சியும் இந்த ரத யாத்திரையை எதிர்க்கவில்லை. மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் சிறுபான்மையினரைத் திருப்திப்படுத்த முயல்கிறது என்று குற்றம் சாட்டப் பட்டது. ஆனால், அங்கே சமீபத்தில் "பிராமணர் மற்றும் புரோஹித் சம்மேளன்" என்ற பெயரில் மாபெரும் பார்ப்பனர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இது திரிணாமுல் காங்கிரசின் மூத்தத் தலைவரும், பிர்பம் மாவட்டத் தலைவருமான அனுபிரதா மோண்டல் என்பவரால் ஒருங்கிணைக் கப்பட்டது. மாநாட்டில் கலந்து கொண்ட பார்ப்பனர்கள் அனைவருக்கும் பகவத் கீதை, இராமகிருஷ்ண பரமஹம்சர் மற்றும் அவரது மனைவி சாரதா தேவியின் படம் பரிசாக வழங்கப் பட்டது. அனைத்துக் கட்சிகளின் கட்டமைப்பும் ஒரே மாதிரியாகத் தான் உள்ளது. நாங்கள் இந்து மதத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்று காட்டிக் கொண்டு, சற்று மிதமான தொனியில் இந்துத்துவா கொள்கையைப் பேசுகிறது காங்கிரசு கட்சி. ராகுல் காந்தியை பூணூல் அணிந்த பார்ப்பனர் என்று அக் கட்சியினரே சித்தரிப்பதைக் கண்டிக்க வேண்டும். ஆனால் அக்கருத்து மதச்சார்பற்ற இந்தியாவில் நன்றாக விலை போகிறது.

சமீபத்தில் நடைபெற்ற குஜராத் தேர்தல் பிரச்சாரத்தின் போது, தானும் ஒரு இந்து என்று நிரூபிக்க, ராகுல் காந்தி 27 கோயில்களுக்குச் சென்றார். அதன் பலனாகத் தான், இக்கோயில்கள் அமைந்துள்ள 18 தொகுதிகளில் வெற்றி பெற்றோம் என்று கருதுகிறது காங்கிரசு கட்சி. குஜராத்தில், பா.ஜ.க.விற்கு எதிராகக் கடும் எதிர்ப்பு நிலவிய போதும் கூட, தன்னால் ஆட்சி அமைக்க முடியவில்லை என்று காங்கிரசு வெட்கப்படவும் இல்லை; இந்துத்துவா கொள்கையில் பா.ஜ.க.வோடு தன்னால் போட்டி போட முடியாது என்பதை உணரவும் இல்லை. இந்துத்துவாவை மிதமான தொனியில் பேசும் ராகுலை எதிர்த்த அனைவரும் அவரிடமிருந்து விரைவில் ஓர் உறுதியான நிலைப் பாட்டை எதிர்பார்ப்பார்கள். இது, இந்தியாவில் "இந்து ராஜ்ஜியம்" அமைவதை விரைவுபடுத்தவே செய்யும் பேராபத்தாகும். மதம் மற்றும் ஜாதி அடிப்படையில் தான் தேர்தல் வெற்றி அமைகிறது என்பது உண்மையாக இருப்பினும், அது நியாயமல்ல. அரசியலமைப்புச் சட்டத்தில் ஜாதியைப் பாதுகாத்து, மக்களை மதச்சார்பின்மை என்ற பெயரில் ஏமாற்றி சதி செய்கிறது ஆளும் வர்க்கம். தர்மநிறபேக்ஷதா (Dharmanirapekshata) என்றால் மதச்சார்பின்மை மட்டுமல்ல; அது பெரும்பான்மை மதத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாக்கும் சூழ்ச்சியாகும். இந்தியா உண்மையிலே ஒரு மதச்சார்பற்ற நாடாக இருந்திருந்தால், நாம் இந்து ராஜ்ஜியத்தின் கோர முகங்களைப் பார்க்க நேர்ந்திருக்காது.

(எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி' மார்ச் 10 இதழில் 'ஆனந்த்டெல்டும்தே எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம். தமிழில்: யாழ் மொழி)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY   TAMIL WEEKLY   REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM   REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## ‘காவி பயங்கரவாத எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு’ முடிவு

# இரத யாத்திரையை எதிர்த்து செங்கோட்டையில் மறியல்!

நாடு தழுவிய அளவில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் காவி பயங்கரவாத நடவடிக்கைகள் பரவலாகி வருகின்றன. தமிழ்நாட்டை தங்களது பிடியில் கொண்டு வரச் செய்யும் முயற்சியாக ஆர்.எஸ்.எஸ். பேரணிகளை நடத்தினார்கள். இச் செயலுக்கு ஒத்துப்போன தமிழ்நாடு அரசு, மோடியின் பொம்மை அரசாகவே இருந்துவருகிறது.

நிவேதிதா நூற்றைம்பதாவது ஆண்டு நினைவு இரதயாத்திரை மத்திய அமைச்சர் பொன். இராதா கிருஷ்ணன் தொடங்கி வைக்க கோவையிலிருந்து சனவரி 22 முதல், பிப்ரவரி 22 சென்னை வரைநடந்து முடிந்துள்ளது. 27 மாவட்டங் களினூடாக 35 கல்லூரிகளுக்குள் நுழைந்து இரண்டு இலட்சம் மாணவர்களைச் சந்தித்து, 3000 கி.மீ பயணத்தை முடித்துள்ளது. சேலம் பெரியார் பல்கலைக்கழகம் முன்னே மட்டும் வளர்மதி மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இவை கல்வி நிறுவனங்களைக் காவி மயமாக்கும் முயற்சியின் பகுதியாகும்.

விஸ்வ ஹிந்து பரிசத்தின் ஏற்பாட்டில் அயோத்தி முதல் இராமேஸ்வரம் வரை “இராமராஜ்ய இரதயாத்திரை” என்ற பெயரில் கீழ்வரும் முழக்கங்களை முன்வைத்து பிப்ரவரி 13 அன்று அயோத்தி யிலிருந்து புறப்பட்டிருக்கிறது.

உத்திரபிரதேசம், மத்தியபிரதேசம், மகாராஷ்ட்ரம், கர்னாடகா, கேரளம் வழியாக தமிழ்நாடு நோக்கி வந்து கொண்டிருக்கிறது. மார்ச் 20 அன்று செங்கோட்டை நுழைந்து, இராஜ பாளையம் வழி மதுரை வருகிறது. மதுரை - இராமேஸ்வரம் - திருநெல் வேலி - கன்னியாகுமரி, நாகர்கோவில் என மார்ச் 23 அன்று திருவனந்தபுரம் சென்று முடிகிறது. அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை நோக்கி நாடு முழுவதும் கலவரச் சூழலை உருவாக்கும் நோக்கில் இந்த இரத யாத்திரை கட்டமைக்கப்பட்டுள்ளது. நாடெங்கிலும் பெரும் கலவரங் களிலும், மசூதி இடிப்பிலும் போய் முடிந்ததை நாடே அறியும். தமிழகத் தில் எதிர்ப்பியக்கம் கட்டமைக்க வேண்டிய தேவை கருதி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் 06.03.2018 அன்று சென்னை பத்திரிகை யாளர் மன்றத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒருங்கிணைக்கப்பட்டது.




இரத யாத்திரை எதிர்ப்பு ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக எல்லையில் ரதயாத்திரையை எதிர்த்து மறியல் நடத்த முடிவு செய்யப் பட்டது. கூட்டத்தின் முடிவுகள்:

1. சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கும் இராமராஜ்ஜிய இரதயாத்திரை தமிழகத்தில் நுழைய அனுமதிக்காதே என தமிழகக் காவல்துறைத் தலைமை இயக்குனரிடம் மனு அளிப்பது.
2. இரதயாத்திரையை தமிழ்நாட்டில் நுழையும் செங்கோட்டை எல்லையிலேயே தடுப்பு மறியல் நடத்துவது என்றும் தலைவர்கள் திரளாகக் கட்சியினருடன் கலந்து கொள்வது என்றும்
3. நெல்லை, மதுரை, விருதுநகர், தென்காசி, இராஜபாளையம் ஆகிய இடங்களில் போராட்டத் தயாரிப்புக் கூட்டங்கள் நடத்துவது என்றும்,
4. காவி பயங்கரவாத எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு - தமிழ்நாடு எனும் பெயரில் அனைத்து அமைப்பு களையும் ஒருங்கிணைப்பது. தொடர் செயல்பாடுகளை முன்னெடுப்பது என்றும்,
5. மீ.த.பாண்டியன் ஒருங்கிணைப் பாளராக செயல்படுவார் என்றும் தீர்மானிக்கப்பட்டது.
6. தொடர் செயல்பாடுகளில் சி.பி.ஐ, சி.பி.ஐ (எம்), சி.பி.ஐ (எம்-எல்), ம.தி.மு.க, நாம் தமிழர் உள்ளிட்ட அமைப்புகளின் தலைவர்களைச் சந்திப்பது, மார்ச் 20 தடுப்பு மறியலில் பங்கேற்க அழைப்பது என முடிவு செய்யப்பட்டது.

கூட்ட ஒருங்கிணைப்பு - தலைமை மீ.த.பாண்டியன் (தலைவர், தமிழ்த் தேச மக்கள் முன்னணி)

பங்கேற்ற தலைவர்கள்: கொளத்தூர் மணி (தலைவர், திராவிடர் விடுதலைக்கழகம்), தி.வேல் முருகன் (தலைவர், தமிழக மக்கள் வாழ்வுரிமைக் கட்சி), வன்னியரசு (துணைப் பொதுச்செயலாளர், விடுதலைச் சிறுத்தைகள்கட்சி), தெகலான்பாகவி (தலைவர், எஸ்.டி.பி.ஐ.), ஜைனுலாபுதீன் (வழக்கறிஞர்அணிச் செயலாளர், மனிதநேய மக்கள் கட்சி), முகம்மது சேக் அன்சாரி (துணைத் தலைவர், பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா), ஆதிதிராவிடன் (பொதுச்செயலாளர், தமிழக மக்கள் சனநாயகக் கட்சி), பொழிலன் (பொதுச்செயலாளர், தமிழக மக்கள் முன்னணி), தமிழ் நேயன் (தலைவர், தமிழ் தேச மக்கள் கட்சி), பாலன் (பொதுச்செயலாளர், தமிழ்த் தேச மக்கள் முன்னணி), தி.கார்ல்மார்க்ஸ் (ஆதித் தமிழர் கட்சி)

கூட்டமைப்பு முடிவின்படி 08-03-2018 அன்று தமிழகக் காவல் துறை தலைமை இயக்குனரைச் சந்திக்க தலைவர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் - தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன், மனித நேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா மற்றும் எஸ்.டி.பி.ஐ. தலைவர் தெகலான்பாகவி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைமை நிலையச் செயலாளர் தகடூர் தமிழ்ச்செல்வன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொதுச்செயலாளர் பாலன், பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா துணைத் தலைவர் முகமது ஷேக் அன்சாரி, திராவிடர் விடுதலைக் கழக சென்னை மாவட்டத் தலைவர் வேழ வேந்தன், இளந்தமிழகம் ஒருங்கிணைப்பாளர் செந்தில் உள்ளிட்டோர் சென்றனர்.

தமிழகக் காவல்துறை தலைமை இயக்குனர் இராஜேந்திரனிடம் இராமராஜ்ய ரதயாத்திரையை தமிழகத்துக்குள் அனுமதிக்கக் கூடாது என்று மனு அளித்தனர். அலுவலக வாயிலில் செய்தியாளர்களைச் சந்தித்து மனு அளித்து வலியுறுத்தி யுள்ளதையும் மார்ச் 20 அன்று தமிழக எல்லை செங்கோட்டையில் இராம ராஜ்ஜிய இரதயாத்திரையை எதிர்த்து தடுப்பு மறியல் நடத்தும் திட்டத்தையும் அறிவித்தனர்.

# எச்.ராஜாவைக் கைது செய்! கொந்தளித்தது தமிழகம்!

எச். ராஜாவைக் கண்டித்து, திராவிடர் விடுதலைக் கழக சார்பில் ஆர்ப்பாட்டங்கள் உருவ பொம்மை எரிப்புகள் நடந்தன.

**குமரி** மாவட்டத்தில் 07-03-2017 புதன் கிழமை, காலை 11.00 மணிக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிறீநாத்திடம் புகார் மனு வழக்குரைஞர் வே.சதா (மாவட்டத் தலைவர்) தலைமையில் தமிழ்மதி (மாவட்டச் செயலாளர்), நீதி அரசர் (தலைவர், பெரியார் தொழிலாளர் கழகம்), சூசையப்பா (முன்னாள் மாவட்டத் தலைவர்), அப்பாஜி (வழக்குரைஞர் அணி துணைச் செயலாளர், தி.மு.க), வைகுண்ட ராமன், வின்சென்ட் ஆகியோரால் வழங்கப் பட்டது.

**ஆனைமலை :** கண்டன ஆர்ப்பாட்டம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஒருங் கிணைப்பில் அனைத்து கட்சிகளின் சார்பில் 07-03-2018 மாலை 5 மணிக்கு ஆனைமலை முக்கோணத்தில் நடைபெற்றது. ஆனைமலை நகரச் செயலர் வே.அரிதாசு தலைமையில், நகர தலைவர் சோ.மணிமொழி முன்னிலையில் நடைபெற்றது.

கண்டன உரையாக நாகராசு (திராவிடர் கழகம்), பரமசிவம் (சிபிஎம் ), மணிமாறன் (வெல்ஃபேர் பார்ட்டி), அப்பன்குமார் (விசிக), சாந்துசாகுல்அமீது (இந்திய ஜவ்கீத் ஜமா அத்), தினேசுகுமார் (தமிழ்நாடு மாணவர் கழகம்) கண்டன உரையாற்றினர். இறுதியாக, வெள்ளிங்கிரி யாழ் (திவிக பொறுப்பாளர்), காசு. நாகராசன் (தமிழ்நாடு திராவிடர் கழகம்) ஆகியோர் உரையாற்றினார்கள். நூற்றுக் கணக்கான தோழர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை :** திருப்பத்தூரிலும், திருவெற்றி யூரிலும் பெரியார் மற்றும் அம்பேத்கர் சிலைளை சேதப்படுத்திய சமூக விரோதிகளை கைது செய்யுமாறு சென்னை காவல்துறை தலைமை ஆணையரிடம் 8.3.2018 அன்று மனு தரப்பட்டது. வடசென்னை கழக மாவட்ட செய லாளர் இரா.செந்தில்குமார் தலைமையில், மாநில செயற்குழு உறுப்பினர் அய்யனார், தென்சென்னை மாவட்ட துணை செயலாளர் சுகுமார், வடசென்னை மாவட்ட தலைவர் ஏசு, ராஜி, மயிலை சிவா, குமரன், தாமு, சாரதி, சரவணன், தீபக் ஆகியோர் கழக சார்பில் மனு அளித்தனர்.

**மயிலாடுதுறை :** எச். ராஜா பதிவு வெளியான சில மணி நேரங்களில் மயிலாடு துறையில் கழகத்தின் முன்னெடுப்பில் பெரியார் இயக்கங்கள், தமிழர் அமைப்புகள், விடுதலை சிறுத்தைகள், தி.மு.க.வினர் இணைந்து பேருந்து நிலையம் அருகே எச்.ராஜா உருவப் படத்தை எரித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தின.

**நாமக்கல்:** எச். ராஜாவைக் கைது செய்ய வலியுறுத்தி நாமக்கல் மாவட்டம் சார்பில் 7.3.2018 அன்று திருச்செங்கோடு பெரியார் சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் சாமிநாதன் தலைமை வகிக்க, மாவட்ட அமைப்பாளர் வைரவேல் மற்றும் திருச்செங்கோடு ஒன்றிய பொருப்பாளர் சதீசு தலைமையில் நடைபெற்றது. திருச்செங்கோடு, பள்ளிப் பாளையம் மற்றும் குமாரபாளைய பகுதியைச் சேர்ந்த கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். காவல்துறை தோழர்களை கைது செய்து இரவு 7 மணிக்கு விடுவித்தது.

**பேராவூரணி:** பேராவூரணி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் எச்.ராசாவைக் கைது செய்ய வலியுறுத்தி கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. கழக மாவட்ட அமைப்பாளர் சித.திரு வேங்கடம் தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேசிய மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் ஆர்.சி.பழனி வேல், “புரட்சிக்கும் வன்முறைக்கும் வேறுபாடு தெரியாதவர்கள், புரட்சிக்கு எதிராக வன் முறையைத் தூண்டி விடுகிறார்கள்” என்றார். முன்னதாக பேராவூரணியில் ஆவணம் சாலை முக்கத்தில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு தோழர்கள் மாலை அணிவித்தனர்.

தமிழ்நாடு முழுதும் தி.மு.க., ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், தமிழ் தேசிய அமைப்புகள் எழுச்சியுடன் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தி தமிழ்நாட்டையே அதிரச் செய்தனர்.

**சேலம் :** சேலத்தில் 07-03-2018 கழகத் தோழர்கள் எச்.ராசாவைக் கண்டித்து பரமேஷ் குமார் (சேலம் மாநகர தலைவர்) தலைமையில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். சாலை மறியலிலும் ஈடுபட்டனர். கிருஷ்ணன் (மாவட்ட அமைப்பாளர்), சந்தோஸ் (ஒன்றிய அமைப்பாளர்-தமிழ்நாடு மாணவர் கழகம்), அண்ணாதுரை(மாவட்ட அமைப்பாளர்) உட்பட 25 பேர் கலந்து கொண்டனர். தோழர்கள் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

**சங்கராபுரம்:** கண்டன ஆர்ப்பாட்டம் சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில், தமிழ் படைப்பாளர் சங்கம் சார்பில் 9.3.18 அன்று மாலை 4 மணி அளவில் நடைபெற்றது. கழக மாவட்ட பொறுப்பாளர்கள் க.இராமர், இளைய ராசன், சி.சாமி துரை, குப்புசாமி, நாகராஜ், வெற்றிவேல், ஆசைத்தம்பி மற்றும் தோழர்கள் பலரும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

**விழுப்புரம் :** பெரியார் சிலைகளை தமிழகத்தில் இருந்து அகற்றுவோம் என்று இணையத்தில் பதிவிட்ட எச்.இராசாவை கண்டித்து 8-3-2018 வியாழன் அன்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக விழுப்புரம் மாவட்டம் மூங்கில்துறைபட்டு கிராமத்தில் எச்.இராசாவின் உருவபொம்மை எரிப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

விடுதலை இராசேந்திரன் உரையின்
தொடர்ச்சி அடுத்த இதழில்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP   Posted: 16th March 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN